**வாங்கி விட்டீர்களா?**

ஈழத்தின் ஈடிணையற்ற
கலை இலக்கிய திங்கள் ஏடு

**சுடர்**
CHUDAR


இப்போது எங்கும் விற்பனையாகிறது!
- கலைஞர் கருணாநிதியின் கவிதை
- நாவலர் நெடுஞ்செழியன் கட்டுரை இன்னும் பல சிறப்பம்சங்களுடன்.

விலை ரூபா 1-00 இன்றே வாங்குங்கள்!

**சுதந்திரன்**
SUTANTIRAN

★ விலை சதம் 35 வ.ஆ. 2007 வைகாசி 27, ஜ.ஆகிர் 10, (9-6-76) புதன் புத்தகம் 30 இதழ் 14

# தாயகம் திரும்பிய தலைவர்களுக்கு தமிழ் மக்கள் அளித்த வரவேற்பு!



பத்து நாட்களுக்கு கொழும்பில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் விடுதலையாகி தமது தாயகமாகிய தமிழ் ஈழத்துக்கு திரும்பிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு யாழ் புகையிரத நிலையத்தில் உணர்ச்சிமயமான வரவேற்பொன்றை அளித்தனர். விடுதலையாகிய தலைவர்கள் க. துரைரத்தினம், தானைத் தளபதி அ. அமிர்தலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், வி. என். நவரத்தினம் ஆகியோரையும் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு ஏ. வி. மகாலிங்கம்)

# 500க்கு மேற்பட்ட ஆயுதப் பொலீஸ் புடை சூழ

# அஞ்சாநெஞ்சன் சிவகுமாரனுக்கு அஞ்சலி!

## ஆறரை மணியுடன் பஸ் நிறுத்தப்பட்டதெனினும் அலைகடலென மக்கள் வெள்ளம் திரண்டது!

சுமார் ஐநூற்றுக்கு மேற்பட்ட பொலிசார் புடை சூழ்ந்து நிற்க—அலை கடலெனத் திரண்டு வந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் — இளைஞர்கள் தாய்மார்கள், மாணவ மாணவியர் அனைவரும்—தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் தலைமையின் கீழ் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக்காக தன்னுயிரீந்த தியாக மாவீரன் சிவகுமாரனின் சிலைக்கு அவன் பிறந்த வீரமண்ணான உரும்பராயில் ஜூன் ஐந்தாம் நாள் கட்டுப்பாட்டுடன் கூடி அஞ்சலி செலுத்திய காட்சி மெய்சிலிர்க்க வைப்பதாயமைந்திருந்தது. இதைத்தொடர்ந்து நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்கள் சிவகுமாரனின் தூய்மையான தியாகத்தைப் பாராட்டிப்பேசினர்.

தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்காகவும், நல்வாழ்வுக்காகவும் தனிவழியிற் சென்று பாடுபட்டுழைத்து. அதிலேயே தன் இன்னுயிரையும் ஈந்தவன்தியாகமாவீரன்சிவகுமாரன் அவன் அமரத்துவமடைந்த இரண்டாவது நினைவு அஞ்சலி தினம் சென்ற யூன் ஐந்து ஆகும். தங்கள் உடன்பிறப்பான தியாகி சிவகுமாரனின் நினைவை யொட்டி, அவனுக்கு அஞ்சலி தெரிவிக்குமுகமாக சிவகுமாரன் பிறந்தஊரான உரும்பராயிலும், மற்றும் பல இடங்களிலும் யூன் 4ம் திகதி வெள்ளிக்கிழமை மாணவ மாணவிகள் ஒரு நாள் பாடசாலை பகிஷ்கரிப்பை தாமாகவே முன்வந்து நடத்தியது குறிப்பிடத்தக்கது. உரும்பராயிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் பூரணமாக பகிஷ்கரிக்கப்பட்டன.

யூன் ஐந்தாம் திகதி காலை உரும்பராய் வேம்பன் மயானத்திலுள்ள சிவகுமாரன் சமாதியில் விசேட ஆராதனை நடைபெற்றது. இந்த ஆராதனையில் தியாகி சிவகுமாரனின் வீரத்தாய் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரையும், தந்தை திரு. பொன்னுத்துரையும் பங்கு கொண்டனர். ஏராளமானோர் சிவகுமாரன் சமாதிக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்: சிவகுமாரனின் சிலைக்கும் மாலை அணிவிக்கப்பட்டு இருந்தது.

சிவகுமாரன் சிலை அமைப்புக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நினைவு அஞ்சலிச் கூட்டம் யூன் ஐந்தாம் திகதி உரும்பராயிலுள்ள தியாகியின் சிலையருகில் இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு மக்கள் திரளுவதைத் தவிர்ப்பதற்குப் போலும், அன்று மாலை 6-30 மணியுடன் இ. போ. ச. சேவைகள் நிறுத்தப்பட்டு விட்டன. எனினும் சைக்கிள்களிலும், காரிலும், நடந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் திரண்டு வந்து மாவீரனின் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

—2-ம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டுப் பிரசாரம் ஏற்படுத்திய தாக்கம்!

"நான் வெளிநாடுகளுக்கு அண்மையில் பிரயாணம் செய்தபோது இந்தத் தமிழர் கூட்டணியினர் நாங்கள் வசிக்கும் நாட்டுக்கு எதிராக எவ்வளவு பிரசாரம் செய்திருக்கின்றனர் என்பது தெரியவந்தது சமீபத்தில் நான் இங்கிலாந்துக்கு விஜயம் செய்த போது இந்தத் தமிழர் கூட்டணியினரின் வாரிசுகள் இங்கிலாந்திலுள்ள ஹைட்பார்க்கில் சுலோகங்கள் தாங்கி இலங்கையை எதிர்த்து பிரசாரம் செய்ததாகவும் அறிந்தேன். அத்துடன், ஆங்கில நண்பர்கள், ஏன் நீங்கள் தமிழர்களை இப்படி நடத்துகிறீர்கள் என்றும் கேட்டார்கள்."

—ரத்தோட்டை பா. உ. திரு எஸ் பி. யாலேகம
(தினகரன் 1-6-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# இளமையும் முதுமையும்!

தலையில் கால் ரூபாய் நாணயம் அளவுக்கு எனக்கு 'வழுக்கை' தோன்ற ஆரம்பித்த போதே அதைப்பார்த்துவிட்டு அண்ணா அவர்கள், "கருணாநிதி! இதற்குத் தொத்தா ஒரு நல்ல மருந்து சொல்வார்கள்; கற்றாழையை விளக்கில் வதக்கி, அதில் படியும் புகையை எடுத்து எண்ணெயில் குழைத்து நாள்தோறும் தடவிக்கொள்" என்று பரிவோடு கூறினார். என்னிடம் சொன்னது மட்டுமல்ல— காஞ்சிபுரத்தில் வீட்டில் தொத்தாவிடமும் (அண்ணாவின் சிறிய தாயார்) சொல்லிவிட்டார் போலும்! தொத்தா என்னை விடவில்லை. நான் போகும் போதெல்லாம் கால் ரூபாய் அளவுக்கு இருந்த வழுக்கையைதொட்டுத்தொட்டுக்காட்டி எனக்கு மருந்து பக்குவம் சொல்லிக்கொண்டேயிருந்தார்கள்.

"சும்மாயிருங்க தொத்தா, வழுக்கை விழுந்தால் நல்லதுதான்; எனக்கு நாற்பது வயது ஆனால் கூட அண்ணா என்னை இளைஞன் என்று தான் கூறிக் கொண்டிருக்கிறார். அதற்காகவாவது எனக்கு வழுக்கை விழட்டும்; அரசியலில் வயது ஏற ஏறத் தான் மதிப்பு அதிகம்" என்று பதில் சொன்னேன். 'நீ போக்கிரியரச்சே' இது தொத்தாவின் அன்பான கண்டிப்பு; அதற்கேற்ப அண்ணாவின் மந்தகாசப் புன்னகை!

வெள்ளிப் பணம் அளவுக்கு இருந்த வழுக்கை இன்று வெண்ணிலா அளவுக்கு விரிவடைந்து என் ஆவலை நிறைவு செய்திருக்கிறது. ஒரு முறை நண்பர் தமிழ் வாணன் என் தலையைப் பார்த்து விட்டு, "என்ன வழுக்கை இவ்வளவு விழுந்துவிட்டதே" என்றார் சிரித்துக்கொண்டே! ஆமாம் இதுதான் 'இளமைக்கு அடையாளம் என்றேன் கேலியாக! எப்படி' என்றார் அவர் வியப்புடன். "தேங்காயில் வழுக்கை இருந்தால் தானே நல்ல இள நீர் என்கிறோம்; அதுபோல இந்த வழுக்கை இளமையைக் குறிக்கிறது" என்றேன்.

இப்படி வயது ஏறுவதையும் அதற்கான அடையாளங்கள் தோன்றுவதையும் நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டவனே தவிர அதற்காக வருந்திக் கொண்டிருப்பவனல்ல, வருந்துவதாகவே வைத்துக் கொள்வோம், அதன் பொருட்டு வயது ஏறுவதற்குப் பதில் குறையத்தொடங்கி மீண்டும் இளமைத் துடிப்பு வந்துவிடப் போகிறதா?

இளமை என்பது வயதிலா இருக்கிறது? பதினெட்டு வயதுப் பருவக்காளை! எடுப்பான மீசை. தேக்கு மரம் கடைந்ததுபோல தேகக்கட்டு. இவ்வளவு இருந்தும் கொள்கை உறுதியில் இலட்சியப் பிடிப்பில் ஈளைகட்டி, இருமல் மிகுந்த கிழவனின் உடல் நடுங்குவது போல் அல்லவா நடுங்குகிற தன்மையை சிலரிடம் காண்கிறோம். அதே போழ்து, தொண்ணூற்றி ஐந்து வயது வரை வாழ்ந்த பெரி பெரியார், "வயதில் அறிவில் முதியார்—நாட்டின் வாய்மைப் போருக்கு என்றும் இளையார்" என்ற புகழ் வரிகளால் அல்லவா புரட்சிக் கவிஞரால் பாராட்டப்படுகிறார். அதே வயது வரை வாழ்ந்த மூதறிஞர் ராஜாஜியின் உறுதியும் துணிவும் கொள்கைப் பிடிப்பும் அவரை எவ்வளவு இளைஞராக தோன்றச் செய்தது!

அத்தனை காலம் வாழ முடியாமற் போனாலும் அண்ணாவாகட்டும் — காமராஜராகட்டும் வாலிப வயதினர் அல்லவே! எனினும் வாலிபர்களிடம் காணக்கிடையாத வைராக்கிய உள்ளமன்றோ அவர்களுக்குக் கொள்கைகளின் பால் இருந்தது.

தளரா ஊக்கம்—தயங்காப்பணி — நெஞ்சில் உறுதி இவைகளின் மொத்த வடிவமாக திகழ்ந்த காந்தியடிகள் இறுதி மூச்சு விடும் வரையில் இலட்சிய தீபமாகத்தானே ஒளி வீசினார்! இளம் வயது கொடுத்த ஊக்கமா அது? அல்ல; அல்ல; எத்தனை வயதானாலும், நரை, திரை, மூப்பு வந்தாலும் மாறாத இளமை உணர்வுடன் கூடிய இலட்சிய உறுதி வழங்கிய அருட்கொடை அது!

—டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
(முரசொலி 21-5-76)

# மானிப்பாய் பட்டினசபை நகரமண்டப திறப்பு விழாவில்

## நாற்றமெடுக்கும் அரசியல் வியாபாரம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டைப் பார்த்த போது — அங்கே பல்லாயிரக்கணக்கில் கூடிய தமிழர்களின் உணர்ச்சிப் பெருக்கைக் கவனித்தபோது எனக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றுதல் கண்டே" என்ற கவிதை வரிகளே நினைவுக்கு வந்தன.

ஆனால்கவிஞர் குறிப்பிட்ட அந்தத் தமிழ்ப் பகைவர்கள் எங்கே மறைந்தார்கள் என்பதை அடுத்த நாளே நான் கண்டுகொண்டேன். இவர்களுக்குப் புகலிடம் கொடுப்பதற்கென்றே மானிப்பாய் பட்டினசபையும், அதன் விசேட ஆணையாளரும் இருக்கும்போது, அவர்களுக்கு என்ன கவலை? மானிப்பாயில் அநியாயம்தானே அரசோச்சும்?

மானிப்பாய் பட்டினசபையின் நகரமண்டபத்தினை அமைச்சர் ஆரியதாசா குமாரசூரியர் சகிதம் வந்து திறந்துவைத்தபோது உள்ள துரோகிகள் அடித்த கொட்டத்தையே இங்கு குறிப்பிடுகிறேன்.

அந்தத் தமிழ்ப் பகைவர்கள் 'ஒண்ட வந்த பிடாரி ஊரிப் பிடாரியை விரட்டிய' கதையாக,தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பட்டினம் மானிப்பாய் என்பதையும், பொது மக்களது உதவியால் உருவான மண்டபம் அது என்பதையும்மறந்தவர்கள்போல் நான்கு சுவர்களுக்கு மத்தியிலே நின்றுகொண்டு 'தட்டிக் கேட்க ஆளில்லையே' என்ற தருக்கிலே வாயில் வந்ததையெல்லாம் உளறிக் கொட்டியிருக்கிறார்கள், வேறு சொற்களில் சொல்வதாயிருந்தால் மானிப்பாய் மக்களின் பொதுச்சொத்தாக விளங்கவேண்டிய மண்டபத்தை 'உதவாக்கரை' அரசியலுக்குப் பயன்படுத்தியுள்ளாரர்கள். நாற்றமெடுக்கின்ற தங்களது 'அரசியலை' விற்பனை செய்வதற்கு கேவலம், அவர்களுக்கு நகரமண்டபமா தேவைப்படுகிறது? உடுவில் தர்மருடன் சுதந்திரக்கட்சி அமைப்பாளரையும்சேர்த்து ஓர் அரசியல் கருத்தரங்கு நடாத்த விரும்பி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறார் இங்குள்ள ஓர் ஆசிரியர். தர்மர் அதற்கு எப்பொழுதுமே தயார் என அறிவித்துள்ளபோதிலும் இந்த விநோதப் பேர்வழி அதன் விளைவை எண்ணி சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக்கழித்துவருகிறார். ஆனால் நீங்கள் நம்புவீர்களோ என்னவோ இந்தக் 'காட்போட், வீரர்கூட நகரமண்டபத்தில் துணிச்சலுடன் பேசியிருக்கிறார்!

வட்டுக்கோட்டை மாநாட்டிலே மானிப்பாய் பட்டினசபை பற்றியோ, அதன்நகரமண்டபத்திறப்பு விழா பற்றியோ யாருமே பேசவில்லை. ஆனால் நகரமண்டபத் திறப்பு விழாவில் பேசிய வேலனும் விநோதனும் நகரமண்டபத்தைப் பற்றிப் பேசியதைவிட வட்டுக்கோட்டைமாநாட்டைப் பற்றிப் பேசியதே அதிகம் என்பேன். அவர்கள் தங்கள் 'சிற்றறிவுக்கு எட்டியவரை' தமிழர்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டது கண்டு— 'இனி நாம் என்ன செய்வது?' என்ற பான்மையிலே பேசினார்கள்.

விநோதன் வெளிப்படையாகவே உடுவில் தொகுதியைப் பொறுத்தவரை பதினாயிரமும்,பதினொன்றுயிரமும் ஒன்று சேர்ந்துவிட்டதால் தமது நிலை இனிமேல் என்னவாயிருக்கும் என்பதை வாய்விட்டே சொன்னார்,

அவர்களுக்கு நாம் ஆறுதல் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம், என்ன இருந்தாலும் அவர்களும் தமிழர்களல்லவா?(அதுமட்டுமல்ல, தங்கள் பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேடுவதுபோல் இப்பொழுதெல்லாம் சந்தனப் பொட்டுகள் வேறு வைத்துக்கொள்ளுகிறார்கள்) "அடுத்த தேர்தலை விடுங்கள் அதுவரை உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. விசேட ஆணையாளர் 'பூச்சு வேலைகள்' செய்துவிட்டு அடிக்கடி அமைச்சர்களை அழைத்துத் திறப்பு விழாக்கள் நடாத்துவார். அப்பொழுதெல்லாம் அவர் உங்களையும் அழைப்பார்; உங்களைவிட்டால் அவருக்கு வேறு யார் இருக்கிறார்கள்?

—"மணி"

### இரண்டரை ஆண்டுகளாக தமிழ்ப் பாடசாலைக்கு மூடுவிழா!

எலமுல்ல — கபரகல்ல அரசு தோட்டத்தை சேர்ந்த கல்லால டிவிசன் பாடசாலை கடந்த 2½ வருட காலங்களாக மூடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது!

இது சம்பந்தமாக இராகலை இ. தொ. கழக மாவட்டப்பிரதிநிதி திரு. வி. ஆறுமுகநாதன் சம்பந்தப்பட்ட பாடசாலை இயங்காமல் இருப்பதால் பிள்ளைகளின் கல்வி மிகவும் பாதித்திருப்பதாக கல்வி மந்திரி டாக்டர் அல் ஹாஜ், பதியுதீன் முகமது அவர்கட்கு முறைப்பாடு செய்துள்ளார். இதன் பயனாக, இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கும்படி நுவரெலியா கல்வி பணிப்பாளருக்கும் பணித்துள்ளதாக கல்வி மந்திரி அறிவித்துள்ளார்.

### தாக்கப்பட்ட இளைஞர்களின் இல்லத்துக்கு அமிர் விஜயம்

தாம் தடுப்புக் காவலில் இருந்தபோது சுழிபுரம், பண்ணாகம், வழக்கம்பரை. தொல்புரம் போன்ற பகுதிகளில் பொலிஸ் தாக்குதலுக்குள்ளான தமிழ் இளைஞர்களின் இல்லங்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் நேரடியாக விஜயம்செய்து தாக்குதலுக்குள்ளான இளைஞர்களுக்கு ஆறுதல் கூறினார். குறித்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுக்கவும் திரு. அமிர்தலிங்கம் ஏற்பாடு செய்துவருகிறார்—

### 500க்கு மேற்..

—1-ம் பக்கத் தொடர்

பொலிசார் இக்கூட்டத்துக்கு ஒலி பெருக்கி அனுமதியளிக்கமறுத்துவிட்டனர். ஒலி பெருக்கியின்றியே அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. ஆயினும், தம்முடன் மோதிய சிவகுமாரனின் வீரத்துக்கு அஞ்சலிசெலுத்துவதற்காகவோ என்னவோ சுமார் ஐநூற்றுக்கு மேற்பட்ட ஆயுதப் பொலிசார் துப்பாக்கிகள், குண்டாந்தடிகள் சகிதம் கூட்டம் நடைபெற்ற இடத்தில் காக்கிச்சட்டையுடன் குவிந்து நிற்கக் காணப்பட்டனர்.

அஞ்சலிக் கூட்டத்திற்கு கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை தலைமை வகித்தார். கூட்டத்தில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை அ. தங்கத்துரை வீ. ஆனந்தசங்கரி, சே. மா. செல்லத்தம்பு ஈழவேந்தன்,திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோருட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

# மாங்குளத்தில் குதூகல வரவேற்பு

சிறையில் இருந்து விடுதலையாகி, யாழ்நகர் சென்ற, தானைத்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களுக்கும் ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்களுக்கும் மாங்குளம் புகையிரத நிலையத்தில் சிறப்பான குதூகல வரவேற்பு மாங்குளம், தமிழ் இளைஞர் பேரவையினராலும் விடுதலைக் கூட்டணியினராலும் வழங்கப்பட்டது. எங்கும் வெடிகள் அதிர புகையிரதத்தை விட்டிறங்கிய அமிர் அவர்களையும் ஏனைய பா. உக்களையும் தமிழ் இளைஞர்பேரவை மாங்குளம் கிளையின் தலைவர் திரு சி. கணேசமூர்த்தியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாங்குளம் பிரமுகர் திரு. ஜே. பி. ஜெயசீலனும் வரவேற்றனர். பின்னர் அவர்களுக்கு குளிர் பானம் வழங்கப்பட்டது. சுற்றி நின்ற 300 அதிகமான ஆண்களும் பெண்களும் சுலோகங்களை எழுப்பி தலைவர்களை வழியனுப்பி வைத்தனர். மேடையிலே உதய சூரியன் கொடிகளுடன் நின்ற இளைஞர்கள் கொடிகளை அசைத்தும் வழியனுப்பி வைத்தனர். வழக்கமாக 11-20 வரும் அன்றைய புகையிரதம் (1-6-76) (12-30) மணிக்கே வந்தது. புளியங்குளத்திலும் த. இ. பேரவையினரும், கூட்டணியினரும் தலைவர்களுக்கு வரவேற்பளித்தனர்—

### குடமுழுக்கு விழா

துன்னாலை வடக்கு அல்லைப் பெற்றான் அருள்மிகு சுப்பிரமண்ய சுவாமி கோவிலில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானுக்கு 3வது தடவையாக குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) விழா 10-9-76 வியாழக்கிழமை நடைபெறுகிறது.

வேப்பெண்ணெய்கலந்து சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப் சரும நோய்களுக்கு சிறந்த நிவாரணமளிக்கிறது.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசாவின் திருவிளையாடல்களால் பட்ட தழும்புகள் சட்டென மறையுமா?

பருத்தித்துறை நகரசபைத் தலைவரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பருத்தித் துறைத் தொகுதி அமைப்பாளருமான திரு. நடராசா அவர்கள் சிறீலங்கா சுதந் திரக் கட்சியிலிருந்து வெளியேறிவிட்டார். பருத்தித்துறையிலுள்ள சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளும் கலைக்கப்பட்டுவிட்டதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. ஆனாலும் தொன்மை மறவேல் என்ற பழமொழிக்கிணங்க— ஆளுங்கட்சியுடன் சேர்ந்து திரு. நடராசா ஆடிய துரோகக் கூத்துக்களை தமிழ் மக்களால் — குறிப்பாக பருத்தித்துறை வாசிகளால் — இன்னும் மறக்கமுடிய வில்லை. பருத்தித்துறை வாசியொருவரின் உள்ளக்குமுறலை இங்கு தந்திருக் கிறோம். அரசியல் ரீதியாக திரு. நடராசா இனத்துக்குச் செய்த பாவங்களை எவ்வாறு கழுவப்போகிறார் என்பதை அவரது வருங்கால நடவடிக்கைகளைக் கொண்டே தமிழ் மக்கள் எடைபோடவிருக்கிறார்கள். —ஆர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வட்டுக்கோட் டைத்தொகுதி அமைப்பா ளர் இராசசுந்தரம் பற்றி யாரோவெல்லாம் எழுதி விட்டார்கள். எங்கள் நகர சபை முதல்வரைப் பற்றி நாடறியாமல் இருப்பது நமக்குமட்டுமல்ல அவருக் குப் நல்லதில்லை. நாங்கள் ஐந்தொழில் செய்யும் நட ராசப் பெருமானையல்ல அனேக தொழில்களைச்செய் யும் ருத்தித்துறையின் நட ராசாவைத்தான் குறிப்பிடு கிறோம். இந்த மூர்த்தி சிறி தென்றாலும் இவரது 'கீர் த்தி' பெரிசு. இன்றும் இவர் தான் எம். பி. சி. எஸ். தலை வர், ஏ. பி. கி தலைவர், டி. டி. கி. தலைவர், கள்ளுக் கோப்பரேசன் தலைவர், மீன் பிடிச்சங்கத் தலைவர், விவ சாச நீதிமன்றத்தலைவர்;

அம்மா ஆட்சியில் இவர் பெற்றவை அதிகம் அவ் வாறு பெற்றதில் எதையுமே இவர் தமக்கு விட்டுக்கொடு த்தது கிடையாது என்று அவரது விசுவாசமான ஊழி யர் உள்ளம் பொருமுவது பகிரங்க ரகசியம். அடுத்த வர் கஷ்டப்படுவது இவருக் குப்பொறுக்குமா? அனைத் தையும் இவரே எடுத்துச் சமக்கிறார். எத்தனை சிறிய மனிதனுக்கு எத்தனைபெரிய மனசிருக்கு! ஒத்துழைப்புக் கேட்டது அம்மா ஆட்சி. சும்மா சொல்லக்கூடாது; ஒத்து நன்கு உழைத்தவர்— எங்கள் தலைவர்தான்!

## விசுவாசங்கள் எத்தனை?

எங்கள் ராசா காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன் னப்பலம் அவர்களுக்கு விசு வாசமாக இருந்தவர் இதை. அவரே, அவர் வாயாலேயே தன்னைக்கொலைகாரன்என்று பேசிவிட்டதாகக் குற்றஞ் சாட்டி அவர் தொடர்ந் திருந்த தேர்தல் வழக்கிற் சாட்சிக் கூண்டில் நின்று சொல்லியுள்ளார். "நான் என் தலைவரை மதிக்கிறேன். எனது தலைவருக்கூடாகவே மக்களுக்குச்சேவை செய் வேன்,'' என்று கூறியவர், அம்மா ஆட்சி வந்ததும் அம்மாவிற்கு விசுவாசி ஆனார். எம். பி. சி. எஸ். பகிரங்கக்கூட்டத்தில் அவரே கூடியிருந்தவர்களைப் பார்த்து இவ்வாறு திமிரா கப்பேசினார். "நான் இந்த ப. நோ. கூ. ச. சமாஜத் திற்கு இலட்சக்கணக்கில் இலாபந்தேடித் தந்தாலும் எனக்குச் 'சேர் பட்டமோ முகாந்திரப்பட்டமோ பெற் றுத்தர உங்களால்முடி யாது. நான் இந்தப் சமா ஜத்தின் பணத்தைக் கொள்ளையடித்தாலும் என் னைச்சிறைக்கனுப்பவும்உங்க ளால் முடியாது. ஏனென் றால், நான், இந்த அரசாங் கத்தின் விசுவாசமான ஊழி யன்!!'

அனுராவை அழைத்து அவர் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவருக்கு பஸ் நிலை யத்தில் கூட்டம் வைத்த போது புதிய யாப்பை ஆக்குவ தன் மூலம் கொல்வின் சிங்கள இனத்திற்கு பெரிய துரோகம் பண்ணிவிட்டார். சிங்களவருக் குக்கொடுக்காத உரிமைகளை எல் லாம் தமிழருக்குக்கொடுத்து விட்டார்.'' என்றவாறு பேசு மளவிற்கு இனவிசுவாச மற்ற. இன்றைய அரசாங் கத்தை விசுவாசித்தவர் நட ராசா அவர்கள்.

இந்த அரசாங்கத்திலே தான் பிரச்சினைகளைத்தீர்க்க முடியும் என்று பேசிவந்த ஐயா அவர்கள் அசம்பாவி தங்களுக்குப் பிறகு 20-5-76 'ஈழநாடு' பத்திரிகையில் 'பிரச்சினைக்குத் தீர்வு இல் லாவிடில் சிறீலங்கா சி. க. வை ஆதரிப்பது, அர்த்தமற் றதாகிவிடும் என்ற தலைப்பு செய்தியை வெளியிட்டு வைத்தார். 1-6-1976 ஈழ நாட்டில் அவரது இராஜி நாமாச் செய்தியும் வந்துள் ளது.

ஐயா வேண்டிய மட்டும் பெற்றுக்கொண்டு வேறு யாரையோ விசுவாசிக்க அடுக்குப் பண்ணுவது தெளி வாகிறது: சிறீலங்காவை விட்டு யு. என். பிக்குப் போகுமளவிக்கு எங்கள் தலைவர் கொள்கையில்லாத வரோ ரோசமில்லாதவரோ அல்ல. ஐயா அங்கு போகவே போகார். அவர் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வர லாம் என்ற சத்தம் பல மாகப் பிறக்கிறது. அவ ருக்கு எங்கள் விடுதலைக்கூட் டணி பற்றி தெரிந்திருக்க மனசார நியாயமில்லை. எங் கள் அணி வந்தான் வரத் தான் வர சோத்துக்கடையு மல்ல; சன்னிதி கோவில் அடியார்களின் சத்திரமு மல்ல:

அடுத்த விசயம் அவர் எங் களிடம் வந்தால் நாங்கள் எங்காவது போயாகவேண் டும். எங்கே போவது? இதை விட வேறு நல்ல இடம் இல் லையே! பருத்தித்துறையி லுள்ள நாங்கள் கடலில் விழுந்து விடுவோம். நீங்க ளும் ஒரு போக்கிடத்தைத் தேடிக் கொள்ள வேண்டி வரும். இன்னொரு விசயம்... அவரது ஒத்து உழைப்பிற்கு எங்கள் கையில் ஆட்சி இன் னும் வந்துவிடவில்லையே!

## ஒரு கல்; இரு மாங்காய்

அண்மையில்அவர்பொதுச் சந்தையை கட்டிமுடித்தது உங்களுக்குத் தெரியும். அத னால் நகருக்கு நன்மை. அவ ருக்கு என்ன நன்மைகள்? அது வேறே விசயம். அது களை நீங்கள் கேட்கக்கூடாது கட்டின சந்தையை அம்மா தான் திறந்து வைக்கும் எண்டு ஐயா நினைச்சார். அம்மாவை அழைக்க முடி வும் செய்தார். என்ன இருந் தாலும் அம்மா எங்கட ஐயா கேட்டு மறுத்திருக்கக் கூடாது. பாவம் ஐயா. எங்க கூப்பிடுவினம் எண்டிருக்கிற எங்கட சூரியமைந்தரும் ஆரியதாசரும் வரவழைக் கப்பட்டனர். நடராசா மிக நல்லவர். நகரசபையைத் தன் சொந்த வீடாகவே நினைத்து பணிசெய்தவர். நகரசபைச் செலவில் நடக் கும் சந்தைத் திறப்புவிழாவு டன் தனது 25 சேவை(?)க்கு தானே ஒரு பாராட்டு[illegible] வும் நடத்தத் திட்டமிட் டார். விழாவிற்கு ஆவ சேர்க்க 'பொப்' போன்ற பல நிகழ்ச்சிகள்.

## சொல்லடியும் பொல்லடியும்

கவுன்சில் விழாவில் ஐயா வின் மகனும் பேசினார். அவ ரெட்படி... கவுன்சில் விழா வில்...?... இப்படி நினைத்து மண்டையை உடைக்காதீர் கள் எங்கட ஐயாக்கு கவுன் சிலே சொந்தச் சொத்து மாதிரி. சின்னையா கிருஷ்ண ராஜா ஒரு சட்டத்தரணி அவருக்குப் பிரபல்யம் தேவைப்பட்டிருக்கு, இப்ப எங்கட பக்கத்தில் அவர் மெத்தப்பிரபல்யம். அன்று சின்னையாக்கு நல்ல 'உசார்' ஏறியிருந்தது. நல்ல உசா ராப் பேசினார். பொலிசுக் குச் சவால் விட்டார். பதி லடி, சூடு இப்படி கனக்கச் சொன்னார். பொலிசார் உடனே சவாலை ஏற்றார்கள். சவால் விட்டவர் நூறு யார் தூரத்தில் உள்ள வீட்டில் இருந்தும் வெளிக்கிட்டு வர வில்லை. மந்திரி விருந்தில் மயங்கியிருந்தாரோ தெரிய வில்லை. இறுதியாகப்பொலி சாருக்கு சவால் விட்டவரை வீடு தேடிப்போய்ச் சந்திக்க வேண்டிய சிரமம் ஏற்பட்டி ருக்கிறது. காணிவலில் ஆமி பொலிஸ் இவரிடம் அடி மானம் பழகியதும் அன்பர் கள் அறிந்ததே.

(பொலிஸ்) நாய்களுடன் பழக்கமுள்ள பொலிசாருக்கு குரைக்கிற நாய் கடிக்காது. என்ற பழமொழி தெரிந் திருக்கவேண்டும். இந்த வாய்வீரன் தனியாக வரா விட்டாலும் தனது வீட்டி லிருந்து விழா நடந்த இடத் திற்கு வெளிக்கிட்டு வந்த சூரியருடனாவது வந்திருக்க லாமே. அப்பாவித் தாய்க் குலம் துகிலிழக்கும் நிலை கூட ஏற்பட்டும் இந்தக் 'கிருஷ்ணர்' எழுந்தருள வில்லை. எங்கள் பா. உ. துரைரத்தினம் மக்கள் அடி படுகிறார்கள் என்ற கேள் விப்பட்டதும் துணிச்சலாகக் களம்தேடிச்சென்று ஆமிக் காரனிடம் அடிபெற்ற வீர வரலாற்றை மேடைமேடை யாகப் பழித்தவரும், மா வீரன் சிவகுமாரனைக் கோழையென்றபெருவீரனு மான நடராசா வீடுவீடாக அழைப்பிதழ் அனுப்பி மக் களை வரவழைத்து அடிவாங் கிக்கொடுத்துவிட்டு, அவர் மட்டும் வீட்டை விட்டு வெளிக்கிடாமல் இருந்த தால் மக்கள் அடிபட்ட புலி யாக இருக்கிறார்கள்.அடுத்த யூ. சி, பாராளுமன்றத் தேர் தல்களில் தந்தையையும் மகனையும் சந்திக்க ஆவ லாக உள்ளார்கள்,

## எடுபிடியும் தடியடியும்

ஐயாவின் சிஷ்யர்களில் ஒருவர் எம். பி. சி எஸ்.இல் [illegible] பார்த்துக்கொண்டு செல வில் சட்டக்கல்லூரியிற் படிக்கிறார். இவரும், கூட் டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும்,துரைரெத் தினம் அவர்களையும் அமைச் சர்கள் அருகில் இருக்கும் துணிவில் திட்டித்தீர்த்தார். அம்மா ஆட்சியை புகழ்ந் தார், ஊர்வலஞ்சென்று அடிவாங்கின தமிழ் இளைஞ ரைப் பழித்தார். பழித்தவர் இவர் 'புளிப்பை'ப் பொலி சார் அரைமணித்தியாலங் களுள் எடுத்திருக்கிறார்கள்; அம்பலத்தில் அடிவாங்கின இவரது தில்லுமுல்லு அம் பலத்திற்கு வராமல் இருக் கிறது. இனி வருவதை இவர் விரும்புகிறாரா? மாண் டில் விசயம் இவருக்கு மற ந்துவிட்டதா? கண்ணாடி மாளிகை வாசியான இவர் இனியாவது கல்லெறிவதை விடட்டும். ஊரில் நண்பர் களிடமெல்லாம் இவர் தானே சட்டக்கல்லூரித் தமிழ்ச்சங்கத்தின் வருங்கா லத் தலைவர் என்று சொல் லித் திரிகிறாராம். இவரைத் தெரிந்த நம் சட்ட மாண வர்கள் சட்டக்கல்லூரித் தமிழ்ச் சங்கத்தைச் சின் னத்தனமாக நினைக்கும் நிலையை உருவாக்குவார் களா?

## பெற்றதும் பட்டதும்

பலத்தைப்பெற்ற நட ராசா ஐயாவுக்கு பலமாய்ப் பட்ட பிறகுதான் புத்தி வந் திருக்கிறது, கெட்ட பின்பு ஞானம் வந்து 'இளைஞரை விடுதலை செய்' என்கிறார். அமைச்சர்கட்கு கூட்டம் வைத்தபோதெல்லாம், ஐயா நாலாம் மாடியை சொல்லி விடுதலை வீரர்களை வெருட்ட முயன்றதை பருத்தித்துறை மக்கள் இன் னும் மறக்கவில்லை, அரசுக்கு எதிராக ஏதோ எழுதிய குற் றச்சாட்டில் கைதுசெய்யப் பட்ட இளைஞன் ஒருவனை பொலிஸ் நிலையத்திலேயே அடித்தவர்கள் யார் என்ப தும் எங்கட்கு நினைவிருக் கிறது. ஆளுங்கட்சியால் விலகிய பிறகுதான் இளை ஞர் சிறையில் இருப்பது கனம் ஐயாவுக்கு தெரிய வருகிறதா?

தலைவர்களை விடுதலை செய்ய ஐயா கேட்கிறார். அரசு அடைத்துத்தான் வைத்தது, அடிக்கவில் லையே. பருத்தித்துறையில் 1964இல் சி. யூ. ஈ. திறக்கப் பட்டபோது காடையர் சிலரை வைத்து நீங்கள் தலைவர்களைத் தாக்க முயன் றதாக அப்போது சொல்லப் பட்டதையும், அவர்களில் ஒருவன் மங்கை அக்காவும் இருந்த இடத்தில் அசிங்க மாகப் பேசி, அசிங்கமாக நடந்ததையும் நினைக்க இன் றும் எமக்கு இரத்தம் கொதிக்கும்; திடீரென்று இன்று ஏன் ஆடு நனையு தென்று ஓநாய் அழுகிறது?

ஐயா, இன்று நீங்கள் பிரதேசபேதத்தைஎழுப்பி இனத்தை பிளவுபடுத்தப் பார்க்கிறீர்கள் போலத் தெரிகிறது; எங்களுக்கு ஈடுகொடுத்து இனவுணர்வு காட்டுபவர்கள் வல்வை மக்கள்; எங்களைப்போன்று தீவிரமானவர்கள் வல்வை இளைஞர்கள்; இனத்துரோ கிக்கு அவர்கள் வாக்களிக் கமாட்டார்கள் என்பதால் போலும் வல்வை பருத் தித்துறையிலிருந்து துண் டாடப்பட்டுஉடுப்பிட்டியுடன் சேர்க்கப்பட்டதை நீங்கள் இதுவரை எதிர்த்ததாகத் தெரியவில்லை. பருத்தித் துறையான் என்பதற்காக பருத்தித்துறையிலுள்ள அறிவுள்ள மக்கள் தரங்கெட்டவனுக்கு எல்லாம் வாக்களித்து விடமாட்டார்கள்.

எங்கே புளியங்கொம்பு கிடைக்கும் தொங்கலாம் என்றிருக்கிற ஐயாவுக்குஒரு ஆலோசனை.அடிக்கடிகொள் கை, விசுவாசம் பண்ணுகிற நீங்கள் சுயேச்சையாக கேக் கிறதுதான் நல்லது. உங்கள் திடீர் அறிக்கைகளைப் பார் த்து ஆறஅமர யோசிக்கா மல் உங்களை தமிழர் விடு தலைக் கூட்டணிக்குள் அனு மதிப்பதற்கு எங்கள் தலை மைப்பீடத்தை அலங்கரிப்ப வர்கள் "பபாக்கள்'' அல்ல!

சுயேச்சையாகப் போட்டி யிடுங்கள், சுயேச்சையாக நாங்கள் தரும் புள்ளடியிலி ருந்து பொலிசார் பொல் லடியிற் படிக்காத பாடத் தைப் நீங்கள் படிப்பீர்கள்.

—பருத்தித்துறையான்.

## டிக்கோயா கிருமக்கொலை ப. க. இலங்கைத் தொழிலாளர் கழக தோட்டக் குழு புதிய நிர்வாகிகள்

கடந்த பன்னிரெண்டு வருடகாலமாக டிக்கோயா கிருமக்கொலை தோட்டத் தில் இலங்கைத்தொழிலா ளர் கழக வளர்ச்சிக்கு பாடு பட்டும் வாலிபமுன்னணித் தலைவராகவும், மாவட்டத் தலைவராகவும், இ. தொ. க: நிர்வாக குழு உறுப்பினராக வும் தற்போதைய இரண்டு வருட காலங்களில் தோட் டத்தலைவராகவும் கடமை யாற்றிய திரு. மு. முருகன் அவர்கள் அண்மையில் இந் தியா செல்ல விரும்பதால் மேற்படி தோட்டத்தில் 30-5-76 ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தல் கூட்டத் தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்க ளாக தெரிவுசெய்யப்பட்ட னர்.

தலைவர்: திரு. எஸ். கந் தையா. உப தலைவர்: திரு: எம். மாந்தராயன் செயலா ளர்; திரு. ஆர். நாகராஜா உபசெயலாளர்; திரு. கருப் பையாதேவர். கமிட்டிகுழுத் தலைவர்; திரு. எஸ். சிவசாமி கமிட்டி உறுப்பினர்கள் திரு வாளர்கள் எம். செல்லையா. ஆர்: கன்னியப்பன், எஸ். கனியபெருமாள், கிட்ண சாமி, திருப்பதி, பி. முருகன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

பண்டிதர் கா. பொ. இரத்தினம்
எழுதும்

**"தடுப்புக்காவலில் 10 நாட்கள்"**

தொடர் கட்டுரை
சுதந்திரன் 13-6-76 ஞாயிறு இதழில் ஆரம்பமாகிறது!

# சர்வவல்லமையுடன் கூடிய போராட்டக் குழு நியமனம்!

## யூலை மாநாட்டின் பின்னர் தொடர்ச்சியான போராட்டம்!

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் முடிவு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தேச போராட்டத் திட்டங்களை உருவாகக்கவும், அவற்றைச் செயற்படுத்தவும், ஏழு பேரைக்கொண்ட சர்வ வல்லமையுடன் கூடிய போராட்டக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தலைவர்கள் கைதுசெய்யப்பட்டாலும், தொடர்ந்து இயக்கம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்தக் குழு நிறைவேற்றுவதுடன், தமக்குப் பின்பும் பொறுப்பானவர்களை தமது இடத்துக்கு நியமிக்கும் அதிகாரமும் இக்குழுவுக்கு கையளிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டம் யூன் 5ம் திகதி காலை திரு. மு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. இப்போராட்டம் குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர்கள் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கும். குறுகிய கால அறிவித்தலில் கூடி நடவடிக்கைகளுக்கான திட்டங்களை தயாரிக்கவும், அவற்றை செயற்படுத்தவும் இந்தக் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் தீர்மானித்தபடி யூலை ஒன்பது, பத்தாம் திகதிகளில் திருகோணமலையில் கூட்டணியின் சிறப்பு மாநாட்டை கூட்டுவதென்று நடவடிக்கைக் குழு மீண்டும் ஊர்ஜிதம் செய்ததுடன், மேற்படி மாநாட்டுக்கான பணிகளில் துரிதமாக சடுபடுவதென்றுமுடிவு செய்தது.

திருகோணமலையில் நடைபெறும் இந்தச் சிறப்பு மாநாட்டிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்ச்சியான சட்ட மறுப்பு போராட்டம்பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது பகிரங்கப் படுத்தப்படவிருக்கிறது.

திருகோணமலை மாநாட்டுத் தீர்மானங்கள் பற்றி ஆராய்வதற்கு, உத்தேச மாநாட்டுக்கு ஒரு கிழமைக்கு முன்னர், அதாவது யூலை 3ம் திகதி சனிக்கிழமை கூட்டணியின் நடவடிக்கைக் குழுக்கூட்டம் நடைபெறும்.

# சர்வாதிகாரத்தை திணிப்பதற்கு 'வெள்ளோட்டம்' விடப்படுகிறதா?

## அனுரா பண்டாரநாயகாவின் பேச்சின் அர்த்தம் என்ன?

1977ம் ஆண்டிலும் பொதுத்தேர்தலை நடத்தாது இந்நாட்டில் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கொன்று புதைத்துவிட்டு சர்வாதிகாரத்தை திணிக்கும் கருத்து இப்போது மக்கள் மத்தியில் வெள்ளோட்டம் விடப்படுகிறதா? இந்தக் கேள்வி இப்போது மீண்டும் அரசியல் வட்டாரங்களில் பரபரப்புடன் எழுப்பப்படுகின்றன. இதையடுத்து 1977ம் ஆண்டில் நிச்சயம் பொதுத் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு எதிர்க்கட்சிகளின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதமரிடம் கோரவிருக்கிறார்.

1977ம் ஆண்டிலும் பொதுத்தேர்தல் நடக்காது என்றும், மக்கள் விரும்பினால் மட்டுமே தேர்தல் நடத்தப்படுமென்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலரும், முக்கிய அமைச்சர்கள் சிலரும் அடிக்கடி பேசிவருவது தெரிந்ததே. அரசாங்கக்கட்சிகள் நடத்திய மே நாள் ஊர்வலத்தின் போதும், 1977ல் பொதுத் தேர்தல் வேண்டாம் என்ற கோஷம் முன் வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்போது பிரதமரின் மகனும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வாலிபர் இயக்கத்தலைவருமான திரு. அனுரா பண்டாரநாயகா புதிய கருத்தொன்றைத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அதாவது — இந்த நாட்டு இளைஞர்கள் பாராளுமன்ற அரசியலமைப்பில் நம்பிக்கை இழந்து விட்டதாகவும், 26 ஆண்டுகளாக இந்நாட்டை ஆண்ட அரசியல் கட்சிகள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணத்தவறியமையே பாராளுமன்ற அரசியலில் இளைஞர்கள் நம்பிக்கை இழந்ததற்கு காரணமென்றும் அவர் கூறியிருக்கிறார்: அத்துடன் பாராளுமன்ற அமைப்பில் இளைஞர்களுக்கு போதிய இடம் கிடைக்கவில்லையென்றும், இதனால் ஏற்பட்ட விரக்தியினாலேயே ஆளும் அரசாங்கத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் இளைஞர்களில் ஒரு பகுதியினருக்கு ஏற்பட்டு—அதன் விளைவாக 1971ம் ஆண்டுப் பயங்கரவாத சம்பவங்கள் உண்டானதென்றும் இளைஞர்களுக்கு ஆட்சியில் பங்கு தராத நிலை தொடர்ந்து, பாராளுமன்ற அமைப்பு தோல்வியுறுமானால், மீண்டும் ஒரு பயங்கரவாதம் தலைதூக்குமென்று அவர் எச்சரித்திருக்கிறார். சீனாவிலுள்ளது போன்ற அமைப்பையே தாம் விரும்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அனுரா பண்டாரநாயகா மேற்கண்டவாறாக ஆசிய நாடுகளின் இளைஞர் கவுன்சிலின் கருத்தரங்கில்—ராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பேசியிருக்கிறார். அவரது சொந்தப்பத்திரிகையான டெயிலிமிரர் ஏட்டில் (5-6-76) முன்பக்கச் செய்தியாகத் தரப்பட்டிருக்கிறது.

திரு. அனுரா பண்டாரநாயகா இத்தகைய ஒரு பேச்சை நிகழ்த்தக் காரணமென்ன? 1977 இலும் பொதுத் தேர்தலை நடத்தாமல் பாராளுமன்ற ஜனநாயகத்தை கொன்று புதைத்துவிட்டு இந்நாட்டில் சர்வாதிகாரத்தை திணிக்கும் நடவடிக்கைக்கு மக்களிடையே எவ்வளவு தூரம் ஆதரவு இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்காக இவ்வாறு 'வெள்ளோட்டம்' விடப்படுகிறதா? இவ்வாறு மக்கள் கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

"நான் ஏன் 1977 பொதுத் தேர்தலைக் கண்டு பயப்படப் போகிறேன்" என்று பிரதமர் வென்னப்புவையில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசியதாக தினகரனும் டெயிலிநியூசும் 6-6-76 இதழில் பிரசுரித்திருந்தன. ஆனால் அதே திகதியில் அனுரா பண்டாரநாயகாவின் டெயிலிமிரர், அம்மாவின் குறிப்பிட்ட பேச்சை பிரசுரிக்கத் தவறிவிட்டது தற்செயலாக நடந்திருக்கக் கூடியதல்ல என்றும் கருதப்படுகிறது.


## தமிழர் விடுதலை கூட்டணி வேண்டுகோள்!

தமிழ் ஈழத்தைச் சேர்ந்த பலர் உலக நாடுகள் பலவற்றில் வசித்து, வேலைவாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள். அவர்களும் தமது தாயகத்தின் இன்றைய நிலைமையை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஆகவே அவர்கள் ஒவ்வொருவரது முழுப் பெயரையும் வெளிநாட்டு முகவரியையும் தமிழ்ஈழத்திலுள்ள அவர்களது முகவரியையும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபரான திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கோ. திரு. மு. சிவசிதம்பரம் அவர்களுக்கோ உடனடியாக அறிவிக்குமாறு அவர்களது நண்பர்கள், உற்றார் உறவினர்களை தமிழர் விடுதலைக் கூட்டணி கோருகிறது.

—மேற்கண்ட செய்தியை கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை கூட்டணியின் சார்பில் விடுத்திருக்கிறார்,

## நித்தியானந்தாவின் மூன்றாவது உரை!

கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் இன்று (9-6-76) மாலை 6 மணிக்கு திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பிரபல தொழிற்சங்கவாதியான திரு. கே. வி. நித்தியானந்தா தமது தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார். கால் நூற்றாண்டு காலமாக இலங்கையின் தொழிற்சங்க வளர்ச்சி பற்றியும், அதில் தமிழரின் பங்கு பற்றியும், அவரது சொற்பொழிவு அமையும்.




இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூன் மாதம் 9-ந் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org